மகிழ்வுடன் கற்று, சிகரம் தொடுவோம்!!

**வேர்ட்ஸ்மித் சிகரம்**

# SECONDARY 3 - BEST MODEL COMPO & EMAIL WRITING PRACTISE TO JUMP GRADE
# உயர்நிலை 3 - சிறப்புத் தேர்ச்சிக்கான தேர்வுத் தலைப்பையொட்டிய கட்டுரை & மின்னஞ்சல் மாதிரிகளோடு பயிற்சிகள்

## பொருளடக்கம்

### நிகழ்வு & அனுபவக் கட்டுரை பயிற்சிகள்


| எண் | தலைப்பு | கருப்பொருள் | பக்கம் |
|---|---|---|---|
| | தொகுதி 1 | | |
| 1 | உன்னைக் கவர்ந்த ஆசிரியர் ஒருவரைப் பற்றியும், அவர் உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக. | கவர்ந்த ஆசிரியர் - தமிழாசிரியர் | 1 - 3 |
| 2 | அண்மையில் உடல் உறுப்பு தானத்தின் அவசியம் பற்றிய பட்டறையில் நீ கலந்து கொண்டு அடைந்த நன்மையை விளக்கி எழுதுக. | உடல் உறுப்பு தானம் | 4 - 6 |
| 3 | தற்செயலாகப் பேரங்காடியின் வாயிலில் யுவனைச் சந்தித்த வேதனுக்கு, யுவன் ஏதோ ஒரு வகையான சிக்கலில் இருப்பதை அவனின் வாடிய முகம் அப்பட்டமாகக் காட்டிக்கொடுத்தது. மெல்ல உரையாடலைத் தொடங்கிய வேதனுக்கு, யுவன் தன்னைச் சுற்றி நிலவும் பிரச்சனைகளால் வாழ்க்கையையே கொஞ்சம் கொஞ்சமாக வெறுத்துக் கொண்டிருக்கிறான் என்பது நன்கு புலப்பட்டது. | நண்பனுடன் திடீர் சந்திப்பு | 7 - 8 |
| தொகுதி 1 வினா 1 - 3 பயிற்சிகள் | | | 9 - 10 |
| | **தொகுதி 2** | | |
| 4 | “நீண்ட நாள்களுக்குப் பிறகு உன் முகத்தில் புன்னகையைப் பார்க்கிறேன். அந்தச் சம்பவத்தை மறந்துவிடு. நடந்தவை நடந்தவையாகவே இருக்கட்டும்” என்று தன் தாயார் கூறியதைக் கேட்டவுடன்தான் வர்மனுக்கு மனதில் நிம்மதி ஏற்பட்டது. | பகடிவதைச் செய்தல் | 11 - 13 |

| | | | |
|---|---|---|---|
| **தொகுதி 14** | | | |
| 40 | நீவிர் போற்றும் ஒருவருடைய நற்பண்புகளையும், அவர் செய்த நற்செயல்களையும் விளக்கி எழுதுக. | நான் போற்றும் மனிதரின் நற்பண்புகள் | 126 - 128 |
| 41 | தண்ணீர் சேமிப்பின் அவசியத்தையும், அதைப் பற்றிச் சிங்கப்பூரர்களுக்கு வலியுறுத்த நீ கூறும் வழிவகைகளையும் விளக்கி எழுதுக. | நீர் சேமிப்பு | 129 - 131 |
| 42 | இன்றைய இளையர்கள் எதிர்நோக்கும் சவால்களையும், அவற்றை எவ்வாறு அவர்கள் சமாளிக்கலாம் என்பதனையும் விளக்கி எழுதுக. | இளையர்கள் எதிர்நோக்கும் சவால்கள் | 132 - 133 |
| **தொகுதி 15** | | | |
| 43 | உன் பள்ளி ஏற்பாடு செய்துள்ள பேச்சுப் போட்டியில் நீ கலந்து கொள்ளவிருக்கிறாய். சாலை விதிகளைக் கடைபிடிப்பதன் அவசியம் என்னும் தலைப்பில் சிற்றுரை எழுதவும். | சாலை விதிகளைக் கடைபிடிப்பதன் அவசியம் | 134 - 136 |
| 44 | இணையத்தைப் பயன்படுத்தும் இக்கால மாணவர்கள் அதன் நன்மை, தீமைகளை அறிந்து விழிப்புணர்வுடன் இருக்க வேண்டும் என்பது குறித்துத் தேசிய இளைஞர்கள் தினத்தில் பேசும் விதமாகச் சிற்றுரை ஒன்றை எழுதவும். | இணையத்தால் ஏற்படும் நன்மை தீமைகள் | 137 - 139 |
| 45 | மாணவர்கள் சிங்கப்பூரை தம் தாய்நாடு என்று கூறுவதில் பெருமிதம் கொள்ள வேண்டும் என்பது குறித்து இன நல்லிணக்க நாளில் நீ பயிலரங்கு ஒன்று நடத்த உள்ளாய். அதற்கான சிற்றுரை ஒன்று எழுதவும். | சிங்கப்பூரின் சிறப்பு | 140 - 141 |


**உறவுமுறை & அலுவலக மின்னஞ்சல் பயிற்சிகள்**


| உறவுமுறை மின்னஞ்சல் | | | |
|---|---|---|---|
| **பயிற்சி வினா** | **மின்னஞ்சல் வகை** | **தலைப்பு** | **பக்கம்** |
| 1 | ஆலோசனை கூறுதல் | இணையத்தளத்தில் பொருட்கள் வாங்குதல் | 142 |
| 2 | அறிவுரை கூறுதல் | திறன் பேசியால் ஏற்படும் விளைவுகள் | 143 |
| 3 | பரிந்துரைத்தல் | 'பள்ளிக்குத் தொண்டு செய்வோம்' நடவடிக்கை | 143 |
| 4 | பரிந்துரைத்தல் | வயது முதிர்ந்தவர்களுக்கான இயங்கலை கருத்தரங்கு | 144 |
| 5 | நன்றி தெரிவித்தல் | கொவிட் - 19 காலத்தில் ஆக்கப்பூர்வமான வழிகாட்டல் | 145 |
| 6 | அறிவுரை கூறுதல் | தம்பியின் தகாத செயல்கள் | 145 |
| 7 | பரிந்துரைத்தல் | முறையான நேர நிர்வாகம் | 146 |
| 8 | அறிவுரை கூறுதல் | தாத்தா பாட்டியின் அருமை | 147 |
| 9 | ஆலோசனை கூறுதல் | மாணவர் பரிமாற்றம் | 148 |
| 10 | அழைப்பு விடுத்தல் | நெடுந்தூர ஓட்டப்போட்டி | 149 |

# தொகுதி 1

<u>**மாதிரிக் கட்டுரை Model Compo 1**</u>

**1. உன்னைக் கவர்ந்த ஆசிரியர் ஒருவரைப் பற்றியும், அவர் உன்னைக் கவர்ந்ததற்கான காரணங்களையும் விளக்கி எழுதுக.**

'*ஒரு விதைக்குத் தாய் என்பது மண்*' என்றால், '*தந்தை என்பது நீர்*' என்றால், அந்த விதையானது தாயால் உயிர் பெறும், தந்தையால் வளம் பெறும். ஆனால், செழித்து வளராது. அதற்குத் தேவை நல்ல உரம். அந்த **உரமாய்** இருந்து ஒரு சிறுவிதையை மாபெரும் **விருட்சமாய்** உருவாக்குபவர்கள்தாம் நல்ல ஆசிரியர்கள். எனவேதான், '*எழுத்தறிவித்தவன் இறைவன் ஆவான்*' என நம் பெரியோர்கள் ஆசிரியர்களைக் கடவுள் நிலைக்கு உயர்த்திப் போற்றினார்கள். நமது சமூகத்தில் ஆசிரியர்களுக்கு அன்றும் இன்றும் நல்ல புகழும், நீடித்த பெயரும் நிலைபெற்றுள்ளது. ஆசிரியர்களின் **தன்னலமற்ற** சேவையும், **கண்ணியம்** மிக்கக்கல்விப் பணியுமே இதற்குக் காரணங்கள். எனக்கு ஆசிரியர்கள் மீது எப்போதும் மிகுந்த மரியாதையும், நிறைந்த அன்பும் உண்டு. அந்த வகையில் எனது நெஞ்சில் நீங்காதிருக்கும் ஆசிரியர்கள் வரிசையில் என் தமிழாசிரியர் திரு.தங்கபாண்டியனும் ஒருவர். அவர் எங்கள் உள்ளத்தில் பதிந்ததையும் பதித்ததையும் பற்றி விவரிக்க உள்ளேன்.

எனக்கு எப்போதுமே மற்ற பாடங்களை விட தமிழ் பாடம் மிகவும் பிடிக்கும். எனது உயர் நிலை மூன்றிலும் நான்கிலும் எனக்குத் தமிழ் பாடம் கற்பித்தவர் திரு தங்கபாண்டியன் ஆவார். தனது தோற்றத்தாலும் பேச்சாலும் கவின்மிகு கற்பித்தல் திறனாலும் முதல் வகுப்பிலேயே என்னை மிகவும் கவர்ந்து விட்டார். எனக்கு மட்டுமல்லாது என் வகுப்பில் உள்ள அனைவருக்கும் அவரை மிகவும் பிடித்திருந்தது. சிங்கப்பூர் சூழலில் பொதுவாகத் தாய்மொழிப் பாடங்களில் மாணவர்கள் அதிக ஆர்வம் காட்டுவதில்லை. இதற்குப் பல காரணங்கள் இருந்தாலும், கற்பிக்கும் ஆசிரியர்களும் பாடங்களை அவர்கள் கற்பிக்கும் போக்கும் முக்கியக் காரணங்கள் என நான் கருதுகின்றேன். கற்பிக்கும் திறனும், கனிவான நெஞ்சமும் கொண்ட ஆசிரியர்கள் மட்டும் மாணவர்களுக்கு அமைந்துவிட்டால், எந்தப் பாடமும் அவர்களுக்குக் கசப்பாக இருக்காது என்பது எனது தாழ்மையான கருத்து.

ஆசிரியர் திரு தங்கபாண்டியன் தமிழ் இலக்கியத்தில் வல்லவர். சங்க கால இலக்கியங்கள் முதல் இந்தக் கால ஹைக்கூ வரை அவருக்கு **அத்துபடி**. அவரிடம் கேட்கும் ஐயங்களுக்குக் காலதாமதம் இன்றி உடனே பதில் சொல்லும் வல்லமை கொண்டவர். '*பெண்ணாசையால் விளைந்தது இராமாயணம், மண்ணாசையால் விளைந்தது மகாபாரதம்*' என இரண்டு பெரிய காப்பியங்களை ஆசிரியர் ஒரே வரியில் சுருங்கச் சொல்லி விளக்கிடுவார். '***பால் நகையாள்**, வெண்முத்துப் பல்நகையாள், கண்ணகியாள் தன் கால் நகையால் கழுத்து நகை இழந்த கதை*' எனச் சிலப்பதிகாரத்தைப் புதுக்கவிதையால் அவர் விளக்கியது இன்னும் எனது நெஞ்சில் **நிழலாடுகின்றது**. அவர், தமிழிலக்கியப் பாடங்களை நடத்தும்போது மாணவர்களை அந்தக்காலச் சூழலுக்கே அழைத்துச்

செல்வார். கதை **மாந்தர்**களின் உணர்வுகளோடு மாணவர்களின் உணர்வுகளையும் ஒன்றிணையச் செய்வார். தமிழ் மொழியின் சிறப்பையும் பழமையும் எங்களுக்கு உணர்த்தியவர் அவரே, இதன் மூலமாகவே எனக்கு மேலும் தமிழ் படிக்க வேண்டும் என்ற **தாளாத** ஆர்வம் ஏற்பட்டது.

திரு.தங்கபாண்டியன் ஆசிரியர் சிறந்த கல்விமான், உயர்ந்த குணவான். அவர் மிகுந்த கண்டிப்பும் நிறைந்தவர் என்பதையும் நான் குறிப்பிட விரும்புகின்றேன். அரையாண்டுத் தேர்வில் கணித பாடத்தில் என் தோழி மற்றொருவரை பார்த்து எழுத முயற்சி செய்ததைக் கண்டு நேரடியாகத் தேர்வு கண்காணிப்பு குழுவிடம் ஒப்படைத்துத் தண்டனை வாங்கித் தந்தார். ஒழுக்கக் **கோட்பாடு**களையும் உயர்ந்த பண்புகளையும் எப்போதும் மாணவர்கள் பின்பற்ற வேண்டும் என்று அவர் எங்களுக்கு அறிவுரை கூறியுள்ளார். என் ஆசிரியர் கல்வியில் எவ்வளவு சிறந்தவரோ அவ்வளவு கனிவான உள்ளத்திலும் **கங்குகரை** காணாதவர். என் வகுப்பு தோழன் ராமனின் ஏழ்மையை உணர்ந்து, அவரது செலவில் இராமனுக்குப் பள்ளி உணவகத்தில் தினமும் உணவு வழங்க ஏற்பாடு செய்தார். அதோடு நின்று விடாமல் 'சிண்டா' மூலம் **நிரந்தர** உதவி கிடைக்கவும் வழி செய்தார்.

பாடங்களில் மட்டுமல்லாது, இணைப்பாட நடவடிக்கைகளிலும் அவர் மாணவர்களுக்குத் தூணாக இருந்து *தோள் கொடுப்பார்.* நாடகம், நடனம், பாட்டு, **விவாதப்போட்டி** முதலிய எல்லாப் போட்டிகளிலும் மாணவர்கள் பங்கெடுக்க அவர் ஊக்குவிப்பார். தாமே, குறிப்புகளும் பயிற்சிகளும் கொடுத்து மாணவர்களைப் பயிற்றுவிப்பார். பாடங்கள் முடிந்து வீடு திரும்பாமல் மாலை நேரங்களில் மாணவர்களுடன் இருந்து அவர்கள் போட்டிகளில் வெற்றிபெற உதவி செய்வார். நாங்கள் வெறும் *ஏட்டுச்சுரைக்காயாக* மட்டும் இருந்துவிடக்கூடாது என்பதில் முழு அக்கறை கொண்ட எங்கள் ஆசிரியர், விளையாட்டுகளிலும் நாங்கள் இமயத்தைத் தொட வேண்டும் என்பதிலும் *கண்ணும் கருத்துமாக* இருந்தார் என்றால் அது மிகையாகாது.

*'தோல்வி என்பது வெற்றியின் முதல்படி'* இதுதான் ஆசிரியர் தங்கபாண்டியன் எங்களுக்கு அடிக்கடி கூறும் பொன்மொழி. நாங்கள் எதில் தோல்வி அடைந்தாலும் தோல்விக்கான காரணத்தை ஆராய வேண்டுமே தவிர கவலைப்பட்டு அழுகக் கூடாது என்று கூறுவார். *'முயற்சியை விடாதவன் ஒருநாள் ஜெயிப்பான், முயற்சி செய்யாதவன் என்றுமே தோற்பான்'* என்று கூறி அவர் எங்களைத் தட்டிக்கொடுப்பார். அவர் கூறியதைப் பின்பற்றியதால் இன்று எங்களில் பலர் நல்ல முன்னேற்றம் கண்டுள்ளோம். எங்கள் ஆசிரியரைக் காணும்போது,

*தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன்*
*மெய்வருத்தக் கூலி தரும்*

என்றுரைத்த தெய்வப்புலவராகவே காட்சியளித்தார்.

இவ்வாறு என் ஆசிரியர் தங்கபாண்டியன் கல்வியில் நிரம்பியவராக மட்டுமில்லாமல் மாணவர்கள் நலத்திலும் அக்கறை கொண்டவராக இருந்தார். போதிப்பது மட்டும் அல்லாமல் போதித்ததைச் செயலில் செய்து காட்டியவராக அவர் இருந்தார். இத்தகைய இயல்புகளைக் கொண்ட தங்க நெஞ்சினர் ஆசிரியர் திரு.தங்கபாண்டியன், என்றும் என் உள்ளத்தில் தங்கி வாழ்கின்றார்.



WORDSMITH

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள்:**

- சுடர் விளக்காயினும் தூண்டுகோல் தேவை

  பொருள் : *நல்ல திறமையுடையவர் ஆனாலும் சிறந்த நிலையை அடைய சரியான வழியில் ஊக்கம் அளிக்க ஒருவர் வேண்டும்.*

- கல்விக்கூடம் ஒரு தோட்டம்; மாணவர்கள் செடிகள்; ஆசிரியர்கள் தோட்டக்காரர்கள். - ஜிக்ஜேக்ளர்

- ஒழுக்கம் உயர்குலத்தின் நன்று

- ஒரு தேசம் **ஊழல்** இல்லாமலும், அறிவாளிகளின் தேசமாகவும் இருக்க மூன்று பேரால் மட்டுமே மாற்றத்தை ஏற்படுத்த முடியும். தந்தை, தாய், ஆசிரியர்தான் அந்த மூன்று பேர் டாக்டர் ஏ.பி.ஜே.அப்துல் கலாம்

- தாமின் புறுவது உலகின் புறக்கண்டு

  காமுறுவர் கற்றறிந் தார்.

  பொருள் : *தாம் இன்பம் அடைவதாகிய கல்வியினாலே உலகத்தாரும் இன்பம் அடைவதைக் கண்டு, கற்றறிந்தவர், மேன்மேலும் தாம் கற்பதையே விரும்புவார்கள்*

**அருஞ்சொற்பொருள்**

| **எண்** | **அருஞ்சொல்** | **பொருள்** | **English Meaning** |
|---|---|---|---|
| 1. | உரம் (உரமாய்) | பயிர் வளர உதவுவது | Fertilizer |
| 2. | விருட்சம் (விருட்சமாய்) | மரம் | Tree |
| 3. | தன்னலமற்ற | சுயநலமற்ற | Selfless |
| 4. | கண்ணியம் | கௌரவம் | Dignity |
| 5. | கவின்மிகு | அழகு நிறைந்த | Full of beauty |
| 6. | அத்துப்படி | எல்லாம் அறிந்தருத்தல் | All-knowing state |
| 7. | பால் நகையாள் | பால் போன்ற சிரிப்பினால் | Pleasant smile |
| 8. | நிழலாடுதல் (நிழலாடுகின்றது) | நினைவுக்கு வருதல் | Remembering |
| 9. | மாந்தர் | மனிதர் | Human |
| 10. | தாளாத | அடக்க முடியாத | Uncontrollable |
| 11. | கோட்பாடு | கொள்கை | Theory |
| 12. | கங்குகரை | எல்லை | Border / Limit |
| 13. | நிரந்தரம் (நிரந்தர) | நிலையான | Permanent |
| 14. | விவாதப்போட்டி | பட்டிமன்ற போட்டி | Debate |
| 15. | ஊழல் | சட்டத்திற்குப் புறம்பான செயல் | Corruption |

**பயிற்சி வினா 2**

**கீழே உள்ள மனவரைபட குறிப்புக்கட்டுரையை (Mindmap Compo) உதவியாகப் பயன்படுத்தி, கொடுக்கப்பட்டிருக்கும் கேள்விக்கு நீ கட்டுரை எழுதவும்.**

**2. அண்மையில் உடல் உறுப்பு தானத்தின் அவசியம் பற்றிய பட்டறையில் நீ கலந்து கொண்டு அடைந்த நன்மையை விளக்கி எழுதுக.**

| **முன்னுரை** | **விளக்கம்** |
|---|---|
| | • அறையிலுள்ள மின்விசிறியின் சுழற்சியால் கையிலிருந்த காகிதப் **படிவம்** 'படபட'த்தது<br>• தாயார் பெருமித உணர்ச்சியுடன் பார்த்தார்<br>• உடல் உறுப்பு தான பட்டறை<br>• புரியவிருக்கும் காரியத்தை நினைக்கையில் - மனம் மானைப் போல் துள்ளியது |
| **கருத்து 1** | **விரிவாக்கம்** |
| ஆசிரியரின் வேண்டுகோள் | • வகுப்பாசிரியை உடல் உறுப்பு தானத்தின் அவசியம் பற்றிய பட்டறை பள்ளியில் நடக்கவிருப்பதாகக் கூறினார்<br>• யாரும் காதில் போட்டுக்கொள்ளவில்லை<br>• ஆசிரியர் **கண்ணில் சைகை காட்டி** என்னைப் போகும்படி கூறினார்<br>• *மாதா, பிதா, குரு, தெய்வம்* - பேச்சினை மீறத் தோன்றவில்லை<br>• பெரிய அளவு நாட்டம் இல்லை - *ஒரு கை பார்த்து விட வேண்டும்* எனத் தோன்றியது |
| **கருத்து 2** | **விரிவாக்கம்** |
| உடல் உறுப்பு தான பட்டறை | • பள்ளி முடிவுற்ற **கணம்** கலந்துகொள்ளுதல்<br>• பள்ளி மாணவர்கள், பொதுமக்கள் - 'புற்றீசல் போல'<br>• மருத்துவர்கள் **கையேடு** வழங்கிக்கொண்டு *இன்முகம் மலர* வரவேற்றல்<br>• தலைமை மருத்துவர் சொற்பொழிவு<br>• இரத்த தான முகாம், கேள்வி பதில் நிலையம், படிவம் பெறும் நிலையங்கள்<br>• அவ்வளவு ஆசையில்லை - ஆசிரியரின் வேண்டுகோளிற்காக இணைந்தேன் |
| **கருத்து 3** | **விரிவாக்கம்** |
| உடல் உறுப்பு தானம் சொற்பொழிவும் அதன் தாக்கமும் | • தலைமை மருத்துவர் **புள்ளி விவரங்கள்** - '*புட்டுப் புட்டு*' வைத்தார்<br>• தினமும் 17 ஜீவன்களின் உயிர் - உலகைவிட்டுப் பிரிகிறது<br>• ஒரு மனிதனால் சுமார் 8 உயிருக்கு மேல் - தானம் கொடுக்க முடியும்<br>• பலரும் தானம் செய்வதற்கு **முனைப்பு** இல்லை - சுயநல காக்கைகள்<br>• மாணவர்கள் தானம் செய்ய இயலுமா? வயது வரம்பு இருக்கின்றதா? |

| கருத்து 4 | விரிவாக்கம் |
|---|---|
| உடல் உறுப்பு தானம் செய்ய ஆசை உருவானது | • 18 வயது முதல் 64 வயது - ஆரோக்கியமானவர்கள் தானம் செய்யலாம்<br>• *ஆறிலிருந்து அறுபது வரை* உடல் உறுப்புகள் **செயலிழப்பு**<br>• குறுகிய நேரத்தில் உதவி கிடைப்பதில்லை<br>• தத்தம் குடும்பத்தார் அழுது புலம்பும் காட்சி ஒளிபரப்பப்பட்டது.<br>• *'மாற்றம் ஒன்றே மாறாதது!'* - மாற்றத்தை என்னிடத்தில் உருவாக்க வேட்கை |

| கருத்து 5 | விரிவாக்கம் |
|---|---|
| அம்மாவின் சம்மதத்துடன் கண்தானம் | • அம்மாவிடம் முடிவு எடுத்துரைத்தல் - முழுச் சம்மதம்<br>• முடிவைத் தலைமை மருத்துவரிடம் முன்வைக்க **விழைந்தேன்**<br>• படிவம் அனைத்தும் பூர்த்திச் செய்ய உதவி<br>• இறந்த பின்னர் - கல்லீரல், கண் விழித்திரை, **கணையம்**, குடல் தானம்<br>• *'உலகம் வேண்டுவது ஒழுக்கமே! சுயநலம் தீய ஒழுக்கம்! சுயநலம் அற்றதே நல்லொழுக்கம்'* - விவேகானந்தர் கூறியது நினைவு |

| முடிவுரை | |
|---|---|
| உடல் உறுப்பு தான பட்டறையின் வழி நன்மை | • அம்மாவின் குரல் கேட்டுத் திடுக்கிடுதல் - நிகழ்நிலைக்கு வருதல்<br>• இறந்த பிறகு கண் தானம்<br>• *வெற்றுக் காகிதமான எனக்குள் அணையா விளக்கு ஏற்றி*<br>• மருத்துவருக்கு நன்றி மாரி<br>• நெஞ்சில் நிம்மதி மேலோங்க, முகம் முழுதும் **பிரகாசம்**<br>*"காலத்தி னால்செய்த நன்றி சிறிதெனினும்*<br>*ஞாலத்தின் மாணப் பெரிது"* -<br>சரியான நேரத்தில் செய்யும் உதவி<br>• இயன்ற அறங்களைச் செய்வது - **இலக்காக** வைத்திருத்தல்<br>• நிச்சயம் பலருக்குக் கைக்கொடுக்கும் - மாற்றம் இல்லை |



**கட்டுரை சிறக்க உதவும் வரிகள்:**

- செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
  வானகமும் ஆற்றல் அரிது
  பொருள் : *ஒருவருக்கு ஒரு நன்மையும் நாம் செய்யாத போதும், அவர் நமக்கு உதவினால், அதற்குக் கைம்மாறாக மண்ணுலகையும் விண்ணுலகையும் கொடுத்தாலும் சமம் ஆகாது.*
- அன்பிலார் எல்லாம் தமக்குரியர் அன்புடையார்
  என்பும் உரியர் பிறர்க்கு.
  பொருள் : *அன்பு இல்லாதவர் எல்லாப் பொருளையும் தமக்கே உரிமையாகக் கொண்டு வாழ்வர்; அன்பு உடையவர் தம் உடம்பையும் பிறர்க்கு கொடுத்து வாழ்வர்*
- தர்மம் தலைகாக்கும் - பொருள் : *செய்யும் தர்மம் தக்க நேரத்தில் நமக்கு உதவும்*
- செயல்கள் எப்போதும் மகிழ்ச்சியைக் கொண்டு வருவதில்லை, ஆனால் செயலில்லாமல் மகிழ்ச்சியில்லை - பெஞ்சமின்
- மிகுந்த அன்புடன் செய்யப்படும் சிறிய விடயங்கள் இந்த உலகை மாற்றும் - அன்னை தெரெசா
- இரும்பை இழுக்கும் காந்தம் போல - பொருள் : *ஈர்ப்பு*
- செவிடன் காதில் ஊதிய சங்கு - பொருள் : *பயனற்ற தன்மை*

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | படிவம் | பூர்த்தி செய்யும் பாரம் | Form |
| 2. | கணம் | நேரம் | Time |
| 3. | கையேடு | துண்டுபிரசுரம் | Pamphlet |
| 4. | புள்ளி விவரங்கள் | சேகரித்த தரவுகள் | Statistics |
| 5. | முனைப்பு | ஆர்வம் | Excitement |
| 6. | செயலிழப்பு | பயன்படுத்த முடியாமல் போவது | Unfunctional |
| 7. | விழைந்தேன் | விரும்பினேன் | Wanted to |
| 8. | கணையம் | வயிற்றில் உள்ள உறுப்பு | Pancreas |
| 9. | நிகழ்நிலை | சுயநினைவு | Realism |
| 10. | மாரி | மழை | Rain |
| 11. | மேலோங்குதல் (மேலோங்க) | அதிகமாக | Overwhelmingly |
| 12. | பிரகாசம் | முகத்தில் சந்தோஷம் | Happiness |
| 13. | இலக்கு (இலக்காக) | நோக்கம் | Aim |
| 14. | விடயம் (விடயங்கள்) | காரியம் | Things |

மகிழ்வுடன் கற்று, சிகரம் தொடுவோம்!!

<u>**பயிற்சி வினா 3**</u>

**கீழ்க்காணும் கருத்துகளை முறையாக விரிவுப்படுத்திக் கட்டுரை எழுதவும்.**

**3. தற்செயலாகப் பேரங்காடியின் வாயிலில் யுவனைச் சந்தித்த வேதனுக்கு, யுவன் ஏதோ ஒரு வகையான சிக்கலில் இருப்பதை அவனின் வாடிய முகம் அப்பட்டமாகக் காட்டிக்கொடுத்தது. மெல்ல உரையாடலைத் தொடங்கிய வேதனுக்கு, யுவன் தன்னைச் சுற்றி நிலவும் பிரச்சனைகளால் வாழ்க்கையையே கொஞ்சம் கொஞ்சமாக வெறுத்துக் கொண்டிருக்கிறான் என்பது நன்கு புலப்பட்டது.....**

**முன்னுரை**

- மடிக்கணினி **பழுது**பார்க்கும் விஷயமாக வேதன் **பேரங்காடி**க்குச் சென்றிருந்தான்
- தூரத்திலிருந்து நண்பன் யுவனின் பொன் முகம் தற்செயலாகக் கண்களுக்குத் தென்பட்டது
- யுவனினது முகம் பொலிவை இழந்து வாட்டமாக உள்ளதை உற்றுக் கவனித்தான்

**இடையுரை**

- அவனது முக வாட்டத்திற்கான காரணத்தை இனங்காண முயலுதல்
- மனதை உருத்தி வரும் பிரச்சனைதான் என்ன என்பதை யுவனிடம் **வினவுதல்**
- மனதில் தேக்கி வைத்திருந்த அனைத்து உள்ளக் **குமுறல்**களையும் சொல்லுதல்
- யுவன் நன்மதிப்பெண்களைப் பெற்றிருந்தும் வேலையில்லாமல் **திண்டாடுவதால்** மன உளைச்சல்
- யுவனுடைய அழுகை நிறைந்த பேச்சு வேதனின் மனதை வருத்தியது
- ஆருயிர் நண்பனுக்கு வேதன் ஆறுதல் வார்த்தைகளைக் கூறி நம்பிக்கை ஊட்டுதல்
- ஊக்கமூட்டும் வகையில் ஹெலன் கெல்லர், பீத்தோவன், அப்துல் கலாம் ஆகியோரின் **சரித்திரக்** கதைகளை நண்பனிடம் கூறுதல்
- திட்டம் போட்டு வேலைகளைச் **செவ்வனே** மேற்கொள்ள கற்றுத்தருதல்
- யுவன் சுயதொழில் ஒன்றைத் தொடங்க பணம் நீட்டி கை கொடுத்தான்.
- சுய காலில் நின்று கடின உழைப்பால் மெல்ல மெல்ல முன்னேறினான் யுவன்.
- சிங்கப்பூரின் சிறந்த இளம் தொழிலதிபருக்கான விருதைப் பெற்று உள்ளம் மகிழ்ந்தான்
- தனது **இடர்** மிகுந்த காலத்தில் தன்னுடன் இருந்து தக்க சமயத்தில் உதவிய வேதனுக்கு நன்றிக்கடன் செலுத்துதல்

**முடிவுரை**

- யுவன் சிந்தித்ததில் ஒன்று நன்கு புலப்பட்டது
- சோர்ந்து போனதால் தனது முட்டாள்தனத்தை எண்ணி வருந்தினான்.
- தன்னை மேம்படுத்திக்கொள்ளப் போவதாகத் தனக்குள்ளேயே உறுதி அளித்தான்
- உதவிபுரிந்த நண்பனை **ஆரத்தழுவி** மீண்டும் ஆனந்த கண்ணீரால் நன்றி கூறினான்.

WORDSMITH BEYOND LEARNING

**கட்டுரை சிறக்க உதவும் வரிகள் :**

- முயற்சி உடையார் **இகழ்ச்சி** அடையார்
- முயற்சி திருவினையாக்கும்
- தெய்வத்தால் ஆகாதெனினும் முயற்சி தன்மெய்

  வருத்தக் கூலி தரும்

  பொருள் : *விதி நமக்கு உதவ முடியாது போனாலும், முயற்சி நம் உடல் உழைப்பிற்கு ஏற்ற பலனைத் தரும்*
- மனதில் உறுதி வேண்டும் - பாரதியார்
- அன்பான நண்பனை ஆபத்தில் அறியலாம்
- வாழ்க்கையில் ஆயிரம் தடைக்கல்லப்பா, தடைக்கல்லும் உனக்கொரு படிக்கல்லப்பா'
- விடாமுயற்சி விஷ்வரூப வெற்றி ______________________________

  ______________________________

**அருஞ்சொற்பொருள்**

| எண் | அருஞ்சொல் | பொருள் | English Meaning |
|---|---|---|---|
| 1. | பழுது | கெட்டுப் போனது | Repair |
| 2. | பேரங்காடி | பெரிய கடை | Shopping mall |
| 3. | வினவுதல் | கேட்டல் | Ask |
| 4. | குமுறல் | வேதனை | Rage |
| 5. | திண்டாடுதல் (திண்டாடுவதால்) | தவித்தல் | Struggle |
| 6. | சரித்திரம் (சரித்திர) | வரலாறு | History |
| 7. | செவ்வனே | நன்முறையில் | In good manner |
| 8. | இடர் | துன்பம் | Difficulty |
| 9. | ஆரத்தழுவுதல் (ஆரத்தழுவி) | கட்டி அணைத்தல் | Hug |
| 10. | இகழ்ச்சி | துன்பம் | Suffer |




WORDSMITH BEYOND LEARNING

**தொகுதி 1 - வினா 1 - 3 பயிற்சிகள்**

**கீழ்க்காணும் பனுவலுக்கேற்ற சொற்றொடர்களைக் கொண்டு கோடிட்ட இடத்தில் பொருத்தமான விடையைத் தேர்ந்தெடுத்து எழுதவும்.**

1. ____________________ என்பதற்கேற்ப இவ்வுலகில் வசிக்கும் ஒவ்வோர் உயிரினத்திற்கும் **ஊக்கமளிக்க ஒருவர்** துணையாகவும் தூண்டுகோலாகவும் இருப்பார். அவ்வகையில் எனக்கும் ஒருவர் பெரும் தூணாக இருந்து என் ஆற்றலை வெளிப்படுத்தி உள்ளார். அவர்தான் என்னைக் கவர்ந்த என் தமிழாசிரியர் ஆவார். அவரின் அன்பும் அரவணைப்பும் எங்களின் வெற்றிக்கு ஆணிவேராக இருந்தது. என் தமிழாசிரியரின் தமிழாற்றலும், தமிழ் பற்றும் எனக்குள் வேரூன்றி நான் பல போட்டிகளில் பங்கெடுக்கக் காரணமாக அமைந்தது.

2. ____________________ என்ற ஜிக்ஜேக்ளரின் கூற்றுப்படி என் தமிழாசிரியரே என்னை வளரச்செய்தவர் ஆவார். எனக்குள் பல நாட்களாக இலைமறை காயாக **மறைந்திருந்த பேச்சாற்றல் திறமையை** வெளிப்படுத்தியவர் என் தமிழாசிரியர் ஆவார். நான் மிகவும் ஆர்வத்தோடு கலந்து கொண்ட சொற்போர் போட்டியில் வெற்றி பெற்று பீடு நடை போட எனக்குத் துணையாக இருந்தவர் அவரே. அவரின் தமிழ் ஆளுமையைக் கொண்டு என்னைப் பயிற்றுவித்த முறை என்னைப் பெருமளவில் கவர்ந்தது.

3. கல்வியைச் சிறப்பாகப் பயிற்றுவிக்கும் திறனைக் கொண்ட என் தமிழாசிரியர் எங்கள் வகுப்பு மாணவர்களை மிகவும் கண்டிப்பாகவும் ஒழுக்கமாகவும் வளர்ப்பதில் மிகுந்த கவனம் கொண்டார். ____________________ என்ற கூற்றின்படி **ஒழுக்கம் உயிரினும் மேலானது** என்பதனைத் தினந்தோறும் எங்கள் மனதில் ஆணி பதிந்தாற்போல எடுத்துரைப்பார். யாரேனும் ஒழுக்கக்குறைவாக நடந்து கொண்டால் அவர்களை அவர் அன்பால் தண்டிக்கும் விதம் என்னை ஆழமாகக் கவர்ந்தது.

4. கடந்த வாரம் நடந்த உடல் உறுப்பு தானத்தின் அவசியம் பற்றிய பட்டறையில் சிவா தன் தாயாருடன் கலந்து கொண்டான். அவனுக்கு அந்தப் பட்டறையில் ஆர்வம் இல்லாதபோதிலும் தன் தாயாருக்குத் துணையாகவே அங்குச் சென்றான். அந்தப் பட்டறையில் காண்பிக்கப்பட்ட காணொளிகள் யாவும் சிவாவின் மனதை உருக்கியது. விளக்கமளித்த மருத்துவர் உடல் உறுப்பு செயலிழந்து பாதிக்கப்படும் மக்களின் புள்ளி விபரங்களைக் கூறினார். ____________________ என்ற திருவள்ளுவரின் கூற்றுப்படி நமது கடமைகளை உணர்ந்து **பிறருக்குச் செய்யும் உதவி மிகவும் உயரியது** என்று அந்த மருத்துவர் எடுத்துரைத்தார்.

5. மருத்துவரின் புள்ளி விவரங்களைத் துல்லியமாகக் கவனித்த அவனின் தாயார் இரத்த தானம் செய்ய முன் வந்தார். பிறகு, ஏதோ ஒரு பாரத்தைப் பூர்த்தி செய்தார். உடல் உறுப்பு தானம் செய்ய நாம் முதலில் பதிந்து கொள்ள வேண்டியது அவசியமானது என்பதனை அறிந்தான். தானும் தாயாரிடம் அனுமதி கேட்டு அந்தப் பாரத்தைப் பூர்த்திச் செய்ய ஆயத்தமானான். ____________________ என்ற **அன்னை தெரெசாவின் கூற்று** அவனின் நினைவில் நிழலாடியது. தனது தானத்தால் **இப்புவியில் வாழும் ஏதோ ஓர் உயிர் நன்மை பெறும்** என்ற நம்பிக்கையில் இல்லம் திரும்பினான்.

WORDSMITH

6. தனக்குத் தேவையான பொருட்களை வாங்கிக் கொண்டு பேரங்காடியில் இருந்து வெளியேறிய குமார் தற்செயலாகத் தன் நெருங்கிய நண்பனான பாரதியைச் சந்தித்தான். அவனின் வாடிய முகம் எதையோ குமாருக்குப் பறைசாற்றியது. தான் வேலையில்லாமல் திண்டாடுவதை மெல்லவும் முடியாமல் கூறவும் முடியாமல் தவித்தவாறு கதறினான். தன் நண்பனின் நிலையறிந்த குமார் ______________________________ என்ற பழமொழியை நினைவுறுத்தினான். எதையும் **முயற்சிக்காமல் சோர்ந்துவிடக் கூடாது என்று ஆறுதல் கூறினான்**.

7. ______________________________ என்ற பாரதியாரின் கூற்றுப்படி **உறுதியோடு தனக்குத் தெரிந்த ஏதாவது ஒரு சுயதொழிலை ஆரம்பிக்கும்படி அறிவுரை கூறினான்** குமார். பல சிந்தனைகளுக்குப் பிறகு பாரதிக்கு ஒரு தெளிவு பிறந்தது. தனக்கு நன்றாகச் சமைக்கத் தெரியும் என்று தன் நண்பனிடம் கூறினான். உடனே, குமார் அவன் நண்பனின் தோளைத் தட்டிக் கொடுத்து இந்தத் தொழில் உனக்குத் துணையாக இருக்கும் என்று கூறிச் சென்றான். மறுநாளே பாரதி சிறியளவில் சமைத்து வீட்டுக்கு வீடு சென்று விற்றான். அவனின் சுவையான சமையலுக்கு அமோகமான வரவேற்பு கிடைத்தது.

8. ______________________________ என்ற பழமொழிக்கு ஏற்ப **தனக்குக் கஷ்டம் வந்த கணமே ஓடி வந்து உதவிய** தன் நண்பனை நினைத்துப் பெருமை கொண்டான் பாரதி. நாட்கள் கடந்தோட அவனது சுயத்தொழிலில் பெரிய வரவேற்பு கிடைத்தது. பாரதி ஓர் உணவகத்தைத் திறக்க முடிவெடுத்தான். அதன் திறப்பு விழாவிற்குத் தன் நண்பனை அழைத்து அவனுக்குச் சிறப்புச் செய்தான். தான் துவண்டிருந்த காலத்தில் நல்ல வழிகாட்டியாக இருந்த நண்பனுக்கு நன்றி கூறினான்.

**கீழ்க்காணும் தெரிவுகளைக் கொண்டு மேலே கொடுக்கப்பட்டுள்ள சூழல்களுக்குப் பொருத்தமான விடையின் எண்களைக்** குறிப்பிடுக.

1. அன்பான நண்பனை ஆபத்தில் அறி
2. முயற்சி உடையார் இகழ்ச்சி அடையார்
3. எரிகிற விளக்காயினும் தூண்டுகோல் தேவை
4. மனதில் உறுதி வேண்டும்
5. ஒழுக்கம் உயிர்குலத்தின் நன்று
6. கல்விக்கூடம் ஒரு தோட்டம்; மாணவர்கள் செடிகள்; ஆசிரியர்கள் தோட்டக்காரர்கள்
7. மிகுந்த அன்புடன் செய்யப்படும் சிறிய விடயங்கள் இந்த உலகை மாற்றும்
8. செய்யாமல் செய்த உதவிக்கு வையகமும்
   வானகமும் ஆற்றல் அரிது

WORDSMITH BEYOND LEARNING

**<u>உறவுமுறை மின்னஞ்சல் - 1</u>**

**ஆலோசனை கூறுதல் - இணையத்தளத்தில் பொருட்கள் வாங்குதல்**

**பின்வரும் மின்னஞ்சலைப் படித்து அதற்கு ஏற்ற விடையெழுதுக.**

| File Edit View Tools Message Help | | |
|---|---|---|
| அனுப்புநர் | : | iniyan@wsmail.com |
| பெறுநர் | : | ilango@wsmail.com |
| தேதி | : | 13/03/2022 |
| பொருள் | : | ஆலோசனை தேவை |

அன்புள்ள மாமாவுக்கு

நான் இங்கு நலமாக உள்ளேன். நீங்களும் அத்தையும் எப்படி இருக்கிறீர்கள்? மாமா, நான் என் ஆண்டு இறுதித் தேர்வை நனிச்சிறப்பாக எழுதியுள்ளேன் என்பதை உங்களிடம் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சி.

மேலும், உங்களின் இணையத்தள வியாபாரம் அமோகமான வரவேற்பைப் பெற்றுள்ளது எனும் தகவலைப் புலனக்குழுவில் கண்டு வீட்டில் அனைவரும் பூரிப்படைந்தோம். மாமா, பள்ளி விடுமுறையை ஆக்கப்பூர்வமான வழிகளில் களிப்பதற்கு இணைய விற்பனைக்கூடங்களில் ஏதேனும் பொழுதுபோக்குச் சார்ந்த பொருட்களை வாங்குவதற்குத் திட்டமிட்டுள்ளேன். இதுவே நான் இணையத்தளத்தில் பொருட்கள் வாங்கும் முதல் முறை என்பதால் எனக்கு சில ஆலோசனைகளைப் பகிருமாறு வேண்டுகிறேன். ஒரு பொருளை வாங்கும்பொழுது கருத்தில் கொள்ள வேண்டிய அடிப்படை தகவல்கள், ஒப்பீடு செய்யும் வழிமுறைகள், பணம் செலுத்தும் முறைகள் மற்றும் வாங்கிய பொருட்களைப் திரும்ப செலுத்தும் அல்லது ரத்து செய்யும் முறைகள் பற்றிய தகவல்களையும் ஆலோசனைகளையும் என்னுடன் நீங்கள் பகிர்ந்து கொண்டால் உதவியாக இருக்கும்.

உங்களின் அனுபவம் எனக்கு நிச்சயமாகப் பயனளிக்கும் என்று நம்புகிறேன்.

இப்படிக்கு

இனியன்

WORDSMITH BEYOND LEARNING

# உறவுமுறை மின்னஞ்சல்
# விடைத்தாள்

**<u>உறவுமுறை மின்னஞ்சல் - 1</u>**

**ஆலோசனை கூறுதல் - இணையத்தளத்தில் பொருட்கள் வாங்குதல்**

பின்வரும் தங்களது தங்கை மகனின் மின்னஞ்சலைக் கவனமாகப் படித்து அதற்குப் பதில் எழுதவும்.

அனுப்புநர் : ilango@wsmail.com

பெறுநர் : iniyan@wsmail.com

பொருள் : ஆலோசனை கூறுதல்

தேதி : 15/3/2022

அன்புள்ள இனியனுக்கு

நானும் அத்தையும் இங்கு நலமாக உள்ளோம். உன் நலம் அறிவதிலும் மகிழ்ச்சி. உன் அம்மா எப்போதும் எனக்காகச் செய்து கொடுக்கும் பால் பாயாசத்தைச் சுவைத்துப் பல நாட்கள் ஆகிவிட்டன. ஆம் இனியா, என்னுடைய இணையத்தள வியாபாரம் **வாடிக்கையாளர்**களிடையே போற்றுதலுக்குரிய வரவேற்பை அடைந்துள்ளதில் நான் உச்சி குளிர்ந்துள்ளேன்.

இனியா, உன் மின்னஞ்சலில் இணையத்தில் பொருள் வாங்குவதற்கான முறைகளை வினவியிருந்தாய். இணையத்தளத்தில் உலகளாவிய நிலையில் எண்ணிலடங்கா விற்பனைக்கூடங்களும் பொருள் தேர்வுகளும் குவிந்திருப்பது உண்மையே. மக்கள் பரபரப்பான சூழலில் தங்கள் நாட்களை நகர்த்துவதால் இன்றைய காலகட்டத்தில் இணையத்தில் பொருட்கள் வாங்கும் தேவையும் அத்தியாவசியமும் அதிகரித்துள்ளது. இணையத்தில் பொருட்கள் வாங்குவதன் மூலம் வீண் அலைச்சலையும் நேர விரயத்தையும் மிச்சப்படுத்த முடிகிறது. இப்போதெல்லாம் நானும் அத்தையும் வீட்டு அத்தியாவசியப் பொருள்கள் உட்பட இணையத்தில்தான் வாங்குகிறோம்.

இனியா, நீ சிங்கப்பூரில் மிகுதியாகப் பயன்படுத்தப்படும் 'Shopee' அல்லது 'Lazada' மின் வணிகத் தளங்களில் பொருட்களை வாங்கலாம். *'வெள்ளம் வருமுன் அணைகோல வேண்டும்'* என்பதற்கேற்ப முன் எச்சரிக்கையோடு ஒரு நடவடிக்கையை மேற்கொண்டால் எதிர்வரும் துன்பங்களைத் தவிர்க்கலாம். எனவே, எந்தத் தளத்தில் பொருட்கள் வாங்கினாலும் ஒரு பயனீட்டாளராக நீ சில **விடயங்களைக்** கருத்தில் கொள்வது அவசியம். நீ வாங்கவிருக்கும் பொருளைப் பற்றி முதலில் சற்று அலசி ஆராய்வது சிறப்பு. ஏனென்றால், அசலானது போலவே பல **போலி**யான பொருட்களும் இன்று பல விற்பனையாளர்களால் விற்கப்படுகின்றன. வாங்கவிருக்கும் பொருளின் **தர உத்தரவாதம்** மற்றும் நம்பகத்தன்மை ஆகியவற்றை அறிந்திருப்பது அதிமுக்கியம். தவிர, ஒரு பொருளின் விலையை நாம் தரத்திற்கு ஏற்றவாறு ஒப்பீடு செய்வதும் அவசியம். இத்தகைய அடிப்படை தகவல்களைச் சீர்தூக்கி பார்க்காவிடில் ஏமாற்றப்படுவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன. எனவே, சாமர்த்தியமாக வாங்க வேண்டியது உனது பொறுப்பு.